

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கலைஞரின் வாழ்க்கை வரலாறு தொகுப்புகளை தயாரித்து வெளியிடுதல், டிவிட்டர், முகநூல் (facebook, youtube, ரீல்ஸ், தொடங்குதல், 100 இளைஞர்களுக்கு வலைதள வசதியுடன் கூடிய கைப்பேசி வழங்கும் நிகழ்வு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்தமிழ் கருணாநிதி தலைமையில் நடந்தது. குட்டிமணி, தமிழரசன் ஆகியோர் வரவேற்றனர். விழாவில், அமைச்சரும் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தகவல் தொழில்நுட்ப பணியின் மாநில செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் லியோனி, திருச்சி மாநகர தி.மு.க. செயலாளர் மதிவாணன், தகவல் தொழில்நுட்ப அணி திருச்சி மண்டல பொறுப்பாளர் கேசவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, திவ்யா, விஜயகுமார் மகாதேவன், முரளி கிருஷ்ணன், உமாராணி பங்கேற்றனர்.

### முதலமைச்சர் தொடங்கி வைத்த புதிய பேருந்துகள் மூலமாக

# சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒருநாள் சுற்றுலாத் தொகுப்பு பயணங்கள்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 11- முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய பேருந்துகள் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் சுற்றுலா தொகுப்பு பயணங்கள் மேற்கொண்டு நீங்காத நினைவுகளை மனதில் பதிவு செய்ய பொது மக்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (9.7.2024) நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி.சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

**முத்தமிழறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்ட சுற்றுலா கழகம்!**

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என குறைந்த செலவில்சுற்றுலாபயணிகளுக்கு பல்வேறு சுற்றுலா சேவைகளை வழங்கி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டியுள்ளார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத காட்சிகளை மனதில் பதிவு செய்ய பல்வேறு சுற்றுலா பயணத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

**ஒருநாள் சென்னை சுற்றுலா தொகுப்பு!**

ஒரு நாள் சென்னை மாமல்லபுரம் சுற்றுலா பயணத்தில் வாலாஜா சாலை சுற்றுலாவளாகத்தில்இருந்து காலை 9.00 மணிக்குப் புறப்படும் பேருந்து திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோவில், சோழிங்கநல்லூர் இஸ்கான் டெம்பிள், முட்டுக் காடு தட்சண சித்ரா பாரம்பரிய அருங்காட்சியகம், முட்டுக்காடு படகு குழாம், சென்னை முதலைக் காப்பகம், சாளுவன்குப்பம் புலிக்குடைவரை, மாமல்லபுரம் ஐந்து ரதம், கடற்கரை கோவில், அர்ஜூனன் தபசு ஆகிய இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்ட பின்னர் இரவு 7.00 மணிக்கு சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

ஒரு நாள் காஞ்சிபுரம் - மாமல்லபுரம் சுற்றுலா பயணத்தில் வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் பேருந்து ஏகாம்பரநாதர் திருக்கோவில், காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோவில், வரதராஜ பெருமாள் திருக்கோவில், கைத்தறி பட்டு அங்காடிகள் செல்லுதல், மாமல்லபுரம் ஐந்து ரதம், கடற்கரை கோவில், அர்ஜூனன் தபசு, வெண்ணை உருண்டை பாறை, முட்டுக்காடு படகு குழாம் ஆகிய இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்ட பின்னர் இரவு 7.00 மணிக்கு சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

**ஒருநாள் பாண்டிச்சேரி தொகுப்பு பயணங்கள்!**

ஒரு நாள் பாண்டிச்சேரி சுற்றுலா பயணத்தில் வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் பேருந்து புகழ்பெற்ற ஆரோவில் சுற்றுலாத்தலம், பாண்டிச்சேரி அருங்காட்சியகம், பாண்டிச்சேரி கடற்கரை, அரவிந்தர் ஆசிரமம், முதலியார் குப்பம் படகு குழாம் ஆகிய இடங்களை சுற்றுலா பயணிகள் பார்வையிட்ட பின்னர் இரவு 7.00 மணிக்கு சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

இந்த சுற்றுலா பயணத் திட்டங்களை மேற்கொள்ள 10 இருக்கைகளுக்கு மேல் சேர்ந்தாற்போல் முன்பதிவு செய்பவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணச் சலுகை அளிக்கப்படுகின்றது.

சுற்றுலா பயணிகளின் பயணத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2 வால்வோ ரக சொகுசு பேருந்துகள், 5 அதிநவீன சொகுசு பேருந்துகள் என குறுகிய காலத்தில் 7 பேருந்துகளை தொடங்கி வைத்துள்ளார்கள். முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய பேருந்துகள் மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஒரு நாள் சுற்றுலா தொகுப்பு பயணங்களை உறவினர்களுடன் மேற்கொண்டு நீங்காத நினைவுகளை பொது மக்கள் மனதில் பதிவு செய்ய வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.ச.கவிதா உள்பட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் வாணாபுரம் அருகே ஓடியந்தல் கிராமத்தில் வேணுகோபால் மகன் சந்திரசேகர் என்பவரின் கூரை வீடு எரிவாயு கசிந்து சிலிண்டர் வெடித்து வீடு தீப்பிடித்து முற்றிலுமாக எரிந்து சேதம் அடைந்தது, இதனை கேள்விப்பட்ட கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து வந்து வீடு எரிந்த குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்குத் தேவையான நிதி உதவி அனைத்தும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செய்து தரும் என உறுதி அளித்து நிதி உதவி வழங்கினார்,இதில் வாணாபுரம் வருவாய் வட்டாட்சியர், வருவாய்த்துறை அதிகாரிகள், ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் மாவட்ட,ஒன்றிய,கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெரி. அழகு

**ஜூலை 11 (1997)**



**கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பொன்னமராவதியில் அமைச்சர் எஸ்.ரகுபதி இல்லத் திருமண விழா!

### ப.சிதம்பரம் - இரா.முத்தரசன் - மு.பெ.சாமிநாதன் - சிவ.வீ.மெய்யநாதன் -கயல்விழி செல்வராஜ் - கே.கே.செல்லப்பாண்டியன் வாழ்த்து!

புதுக்கோட்டை ஜூலை 11- புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ். ரகுபதியின் இல்ல திருமண விழா பொன்னமராவதியில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பிரம்மாண்ட வரவேற்பு நிகழ்ச்சி திருமயம் அருகே உள்ள ஜெ.ஜெ.கல்லூரி வளாகத்தில் மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முன்னதாக கல்லூரி வளாகத்தில் உள்ள கோயிலில் இருந்து சாரட் வண்டி மூலம் மணமக்கள் நாச்சியப்பன் ரகுபதி, அழகம்மை ஆகியோரை கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் படை சூழ விழா மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். பின்னர் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் ஒவ்வொருவராக வரிசையில் நின்று மணமக்களை வாழ்த்தி சென்றனர். ஒரே நேரத்தில் அமைச்சர் ரகுபதியின் வரவேற்பு நிகழ்ச்சி யில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டதால் அப்பகுதி முழுவதும் விழா கோலம் பூண்டது. நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், சிவ.வீ. மெய்யநாதன், கயல்விழி செல்வராஜ், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சி மாநில தலைவர் ஜவாஹீர் வுல்லா எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சண்முகம், எம்.எம்.அப்துல்லா, நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, இனிகோ இருதயராஜ், எம். சின்னத்துரை, எஸ்.ஆர்.ராஜா, நயினார் நாகேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் மெர்சி ரம்யா, திண்டுக்கல் ஐ.லியோனி, கவிஞர் காசி. முத்து மாணிக்கம், தமிழன் பிரசன்னா, துறைமுகம் காஜா,

அறந்தாங்கி ராசன், பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைபித்தன்,

த.சந்திரசேகரன், புதுகை விஜயா, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், வி.என்.மணி, எஸ். அசோக் பாண்டியன், பி.டி. அரசக்குமார், வழக்கறிஞர் சி ராமநாதன், இளையராஜா, கே.ஆர்.என்.போஸ், பரணி இ.ஏ.கார்த்திகேயன், அரு. வீரமணி, அ.சுப் பிரமணியன், ஆ.செந்தில், பெ.ராஜேஸ்வரி,

க.மதியழகன், எஸ்.எஸ். கருப்பையா, ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், எம். லியாகத்அலி, அபுதாஹீர், சுப. சரவணன், கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், ஆர்.ஆர்.கே. கலைமணி, எஸ்.ஜெயராமன், இரா. ஆனந்த், க.ராஜேந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, இராசு.சந்தோஷ்,

ஆர்.செல்லத்துரை, எம். செந்தில்குமார், சி.ஆர். வி.சித்ரா, சீனி. பழனியப்பன், கே.எம்.சுப்பிர மணியன், ஆர். வி.செல்வம், த. மணிராசன், வீரய்யா. உதயம் சண்முகம்,

தவ.பாஞ்சாலன், கே.எஸ். சந்திரன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, வெ. முத்துக்கிருஷ்ணன், மு.க.ராம கிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, மு. பி.ம.சத்தியசீலன், என்.சேட்டு, சி.சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாச்சலம், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஆர். ஆர்.சாமிநாதன், வே.பொன்துரை, சக்தி ராமசாமி, எஸ்.எம்.சீனியார், டி. தங்கமணி, அரு வடிவேல், அ. அடைக்கலமணி, அ.முத்து, எல்.குமார், கே.எஸ்.ரவி, இரா. கணேசன், அழகு சிதம்பரம், அ.அழகப்பன்,

உ.முருகேசன், பி. அண்ணாத்துரை, வை. விஜய குமார், எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, நாசர் (எ) செந்தில்குமார், கே.சி.சிவக்குமார், ஆ. பழனிக்குமார், க.நைனா முகமது

எம்.எம்.பாலு, மு.கலிய மூர்த்தி, திலகவதி செந்தில், ஜெயலெட்சுமி தமிழ்ச் செல்வன், மாலா ராஜேந்திரதுரை, மேகலா முத்து, பா.வெங்கடேசன், பூங்குடி எம்.சிவா, டாக்டர் மு.க.முத்துக் கருப்பன், எஸ்.திருஞான சம்பந்தம், கே.கணபதி, அ.ரெத்தினம், எம்.வேலுச்சாமி, பி. சண்முகம், ரெ.தங்கம், ஆர். பாலகிருஷ்ணன், ஏ.ராம லிங்கம், உரக்கடை எம்.கருப்பையா, க.ரெங்கராஜ், செந்தாமரை பாலு, மு.பி.மணி, இராம. செல்வராஜ், டாக்டர் சி.குறிஞ்சிவாணன், டி. அப்புக்காளை, தவசுமணி, மணிமொழி மனோகரன், சி.அரங்கநாயகம், மு.கலைஞர் கருணாநிதி, செ.கணேஷ், மஜீத் முபாரக், எஸ்.கமலா, எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், க.கவிவேந்தன், பி.சின்னையா,

கே.எஸ்.ச.இளையச்சூரியன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, டி.எம்.ஆர்.ராம மூர்த்தி, டி.சூசைராஜ், ஆர். டி.ஆர்.ராமசாமி, அ.பிரபா, பொன்.பாரிவள்ளல், வி.என். எம்.பாலு, வி.ஜி.ஆர். மணி வண்ணன், எம்.செந்தில்குமார், வே. ராஜேஸ், எம். ராஜா,

கா.இளவரசன், என். வீரைய்யா, ஆ.கலைச் செல்வன், இரா.மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, குமரேசன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், இ.ஏ.பெரியகருப்பன், வளர்மதி, கருணாகரன், தி.முத்து, பாத்திமா பீவி, தேவி, சக்திவேல், முத்துக் குமார், மு. கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, நூ.அன்சாரி பாஷீத், இரா. தமிழ் ராக, க. கவிக்குமார், பி.எல்.இளையராஜா, செ.அருண்சேகர், நா. நசுருதீன், அ.முகம்மது ரபீக், ராஜேந்திரசோழன், அஸ்ரப் அலி மற்றும்

அணிகளின் துணை அமைப்பாளர்கள், அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் மற்றும் ஏராளமானோர் மணமக்களை வாழ்த்தினார்கள்.

### வணிகவரி இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம்!

# வரி வருவாயை அதிகப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வீர்!

## வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அறிவுரை!

சென்னை, ஜூலை 11- வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (09.07.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் 2024-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் சார்பில் - மறைந்த வணிகரின் குடும்பத்தி னரான சென்னை மணலியைச் சேர்ந்த திருமதி சி. உமா மகேஸ்வரிக்கு குடும்ப நல நிதி உதவித் தொகையாக ரூ.3,00,000/ (ரூபாய் மூன்று லட்சம்) காசோலையை அமைச்சர் வழங்கினார்.

வணிகவரித்துறையில் 2024-2025-ஆம் நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் (ஏப்ரல், மே மற்றும் ஜூன்) கடந்த நிதியாண்டைவிட ரூபாய் 3,727 கோடி கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் அறிவுறுத்தலின்படி கடந்த 02.07.2024 அன்று வணிகவரித்துறை நுண்ணறிவுப்பிரிவின் கூடுதல் ஆணையர் மற்றும் அலுவலர்கள் மேற்கொண்ட சிறப்புச் சோதனையில் ரூ.1,040 கோடி போலி உள்ளீட்டு வரியினைக் கண்டுபிடித்து போலியான பில் வழங்கிய 316 பதிவுச்சான்றுகள் ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பணித்திறனாய்வு கூட்டத்தில் வழங்கப்படும் அறிவுரைகளை சம்பந்தப்பட்ட இணை ஆணையர்கள் தங்கள் கீழுள்ள துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் மாநில வரி அலுவலர்களிடம் கலந்தாலோசித்து வரி வருவாயை அதிகப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தங்கள் கோட்டத்திற்குட்பட்ட நிலுவையில் உள்ள இனங்களை ஆராய்ந்து விரைந்து முடிக்கவும், மேற்கண்ட பணிகளைச் செயல்படுத்தத் தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் வசதிகளை அரசுக்குத் தெரியப்படுத்தலாம் எனவும் அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

மேலும், தரவுகளின் உண்மைத் தன்மையினைக் கண்டறிய அதிநவீன மென்பொருள்கள் விரைவில் துறையில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) பொ.இரத்தின சாமி, வணிகவரித்துறை கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர்,தமிழ்நாடு கால்நடை ஆட்சி மன்ற குழு உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ,மாவட்டஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், நகராட்சி தலைவர் கே.திருநாவுக்கரசு, நகராட்சி துணைத்தலைவர் யு.வைத்தியநாதன் ஆகியோர் முன்னிலையில் உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் டாக்டர் அகர்வால்,ஆர்.கே.கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் தூய்மை பணியாளர்கள், தூய்மை பாரத இயக்க பணியாளர்கள்,குடிநீர் இயக்கப் பணியாளர்கள், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்காக நடத்தப்படும் இலவச கண் பரிசோதனை முகாமினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீர்காழி வை. ஞானசேகரன்

**ஜூலை 11 (2014)**



**அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.**

**ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.**

**கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.**

**அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.**

**சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, 'கலைஞர் செம்மொழி நூலகம்', 'தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்' ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**